இனிமையான குழந்தைகளே! தந்தையை சரியான முறையில் புரிந்து கொண்டு நினைவு செய்வதனால் தான் உங்களுடைய பாவம் அழியும். ஆத்மா தூய்மையின்மையிலிருந்து தூய்மை ஆகும். முதலாவது பாடமே நினைவைப் பற்றியது தான்.

கேள்வி: மனிதர்களின் வேண்டுதல் என்ன? மேலும் அந்த வேண்டுதல்களைத் தந்தை எப்படி பூர்த்தி செய்கிறார்?

பதில்: மனிதர்கள் தந்தையிடம் வேண்டுகிறார்கள் - ஓ இறைத்தந்தையே, எங்களை பாவங்களி லிருந்து விடுதலை செய்யுங்கள், ஓ.... கருணையுள்ளம் கொண்ட பாபா, கருணை காட்டுங்கள், பாபா அனைவரின் வேண்டுதல்களைக் கேட்டு தாமே வருகின்றார். மேலும் பாவங்களிலிருந்து முக்தியடைவதற்கான யுக்தி கூறுகின்றார் - குழந்தைகளே, நீங்கள் என்னை நினைவு செய்யுங்கள். வெறுமனே தந்தையின் மகிமை பாடுவதனால் எந்த பலனும் இல்லை, பெருமை களைப் பாடுவதாலும் பலன் இல்லை, பதிலாக இராஜயோகத்தைக் கற்று ஒழுக்க மானவராக ஆகுங்கள்.

பாடல்: கள்ளம் கபடமற்றவர்களிலிருந்து தனிப்பட்டவரே....

ஓம்சாந்தி. யாருடைய மகிமையைக் கேட்டீர்கள். வழிதவறியவர்களை திருத்தக்கூடி யவருடைய மகிமையை கேட்டீர்கள். முதல்-இடை-கடை பற்றிய ஞானம் கூறும் அவர் உயர்ந்த திலும் உயர்ந்தவர். புரிந்து கொள்ள யாராவது வரும்பொழுது, உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் என்பதை முதல் விஷயமாக எப்போதும் புரிய வைக்க வேண்டும். கிரந்தத்திலும் அவர் பெயர் உயர்வானது. அவர் இருப்பிடம் உயர்வானது. உயர்ந்ததிலும் உயர்வானவராக பரமபிதா பரமாத்மா இருக்கின்றார். அங்கு ஆத்ம (அசரீரி) உலகம், அங்கேதான் அசரீரியான பரமபிதா பரமாத்மா வசிக்கிறார். அடுத்து, கீழே ஆகார (சூட்சும) மற்றும் சாகார (மனிதர்கள் வாழும்) உலகம் உள்ளது. ஆகவே முதன் முதலில் அவருடைய அறிமுகம் கொடுக்க வேண்டும். பரமபிதா பரமாத்மா சத்தியமான வராக இருக்கிறார். அவரே படைப்பாளர். அடுத்ததாக அவரது படைப்புகள்; உயர்ந்ததிலும் உயர்ந்தவராக விதை ரூபமானவர். பிறகு அவருக்கு கீழே சூட்சமவதனவாசிகள் - பிரம்மா, விஷ்ணு மற்றும் சங்கர். இவர்கள் படைப்பு. படைப்பாளர் அனைவருக்கும் மேலே இருக்கின்றார். அந்த படைப்பாளர் தந்தை, மற்றவர்கள் படைப்பு. அனைவரும் ஒரு பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள். ஆகவே ஆத்மாக்கள் நாம் அனைவரும் சகோதர- சகோதரர்களாக உள்ளோம், பரமபிதா பரந்தாமத்தில் இருக்கின்றார், அவருக்குத் தான் பரமாத்மா என்று கூறப்படு கிறது. சரீரமுடைய தந்தைமார்கள் அநேகம் பேர் இருக்கின்றார்கள் அல்லவா? முதன்முதலாக ஆன்மீகத் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். அனைத்தும் அவரது படைப்புகள். சித்திரங்கள் மீதும் கவனத்தைக் கொண்டு வரச் செய்ய வேண்டும். முதன் முதலில் உயர்ந்தவர் பரமபிதா பரமாத்மா, மனித சிருஷ்டி ரூபமான மரத்தின் சைத்தன்ய விதை ரூபமானவர் என அவரை அழைக்கிறோம். அவர் சத்-சித்-ஆனந்த சொரூபமானவர். சத் என்றால் சத்தியத்தைக் கூறுபவர். ஆத்மாவும் சத்தியமானதாக உள்ளது. அதுவும் எரிவதோ இறப்பதோ இல்லை. சத்தியமானவரின் குழந்தைகளும் சத்திய மானவர் களாகவே இருக்க வேண்டும். நீங்கள் முதன் முதலில் தேவி

தேவதைகளாக உண்மையானவர்களாக இருந்தீர்கள். சத்திய கண்டத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர் உண்மையான பரமபிதா பரமாத்மா பொய்யான கண்டத்தை ஸ்தாபனை செய்கிறார் என்பதெல்லாம் கிடையாது. அப்படி இல்லை. சத்திய கண்டமாக இருந்தது பிறகு இந்த பாரத கண்டம் பொய்யானதாக ஆகி யிருக்கிறது. உண்மையானவர் பரமபிதா பரமாத்மா. தூய்மை இழக்க காரணமானவர்களை உண்மையானவர் என்று கூறமாட்டோம். ஆகவே மற்ற அனைவரும் பொய்யானவர்கள். 5 விகாரங்கள் என்ற மாயா இராவணன் பொய்யானதாக ஆக்குகிறான். இராம் உண்மையானவர், இராவணன் பொய்யானவன். இராவணன் தான் பாரதத்தை பொய்யானதாக ஆக்குகிறான். கதைகள் அனைத்தும் பாரதத்தில் தான். பாரதம் சொர்க்கமாக இருந்தது. இப்பொழுது நரகமாக உள்ளது என புரிய வைக்க வேண்டும். தந்தையை சொர்க்கம் உருவாக்கக் கூடியவர் அல்லது சொர்க்கம் படைக்கக் கூடியவர் என கூறுகிறோம். மகிமையும் பாரதத்திற்குத்தான். ஆதி-மத்ய-அந்திமத்தின் ஞானத்தை உங்களுக்குக் கூறு கின்றார். இதன் மூலம் நீங்கள் திரிகாலதரிசி ஆகிறீர்கள். இதற்கு சுயதரிசன சக்கரம் என்று கூறப்படுகிறது. நாம் ஆத்மாக்கள் பரமபிதா பரமாத்மாவிடமிருந்து மீண்டும் ஆஸ்தி அடைந்து கொண்டிருக்கின்றோம் என நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆத்மாக்களும் பரமாத்மாவும் பலகாலமாக பிரிந்திருந்தனர் என்ற பாடலும் உள்ளது. இப்பொழுது இந்த சந்திப்பு மிகவும் அழகானது, நன்மை நிறைந்தது. நீங்கள் முதன் முதலில் தந்தையின் அறிமுகம் கொடுக் கிறீர்கள். படைப்பாளர் தந்தையை சர்வவியாபி எனக் கூறுவதால், நாம் அனைவரும் அவரது குழந்தைகள் என்பது நிரூபணம் ஆகாது. நாம் அனைவரும் பரமபிதா பரமாத்மாக்கள் என குழந்தைகள் கூறமாட்டார்கள். சர்வவியாபி எனக் கூறுவதால் தந்தையிடம் அந்த அன்பு இருக்காது. புத்தி தொடர்பும் இருக்காது. பாரதத்தின் புராதனமான யோகம் புகழ் பெற்றது. உண்மையில் புத்தி தொடர்பை தந்தையிடம் இணைக்க வேண்டும். அவர் சர்வ வியாபி என்றால் பிறகு யாரோடு யோகத்தை இணைப்பீர்கள்? அர்த்தம் எதுவும் அதில் இல்லை. இங்கு நீங்கள் அர்த்த சகிதமாக புரிந்து கொள்கிறீர்கள். தந்தை தாமே கூறுகிறார்: என்னோடு யோகத்தை (நினைவை) இணைப்பதால் உங்கள் விகர்மம் (பாவங்கள்) விநாசம் ஆகிவிடும். விகர்மமோ ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சம்பூர்ண கர்மாதீத் நிலை கடைசியில் ஏற்படும். ஞானத்தின் இறுதியில் முடிவு வெளிப்படும். பள்ளிக்கூடத்திலும் சிலர் ஏதாவது பாடத்திலும் வேறு சிலர் வேறு ஏதாவது பாடத்திலும் புத்திசாலியாக இருப்பார்கள். சகஜமான பாடம் நினைவு. தந்தையை நினைவு செய்யப்படுகிறது. நினைவினால் ஆத்மா மீண்டும் சிறந்ததாகுகிறது. பாத்திரம் (புத்தி) சுத்தமாக ஆகும். அசுத்தமாக இருந்த ஆத்மா சுத்தமாக ஆகிறது. உயர்ந்ததிலும் உயர்வான தந்தை வந்து கற்றுத் தருகிறார். மேலும் உயர்ந்ததிலும் உயர்ந்த பிராப்தியை அளிக்கின்றார். நீங்கள் மனிதனிலிருந்து தேவதை ஆகிறீர்கள். உண்மையில் ஆதிசனாதன தேவதா தர்மம் இருந்தது என புரிந்து கொள்கிறீர்கள். அவர்களை ஹிந்து என கூறமுடியாது. இந்து தர்மம் என்பது அழகு தரவில்லை. பாரதத்தின் பெயரைத்தான் ஹிந்துஸ்தான் என மாற்றி வைத்து விட்டார்கள். ஆதிசனாதன பவித்திர தேவி தேவதா தர்மம் இருந்தது. அதற்கு வைகுண்டம் அல்லது சொர்க்கம் எனக் கூறப்படுகிறது. அது சத்யுகம். அது புது உலகம் எனக் கூறப்படுகிறது. அதனை படைப்பவர் தந்தை. அவர் நிராகாரமானவர். அனைவரும் ஓ.... இறைத் தந்தையே! எனவும் கூறுகிறார்கள். அவர் உயர்விலும்

உயர்வாக இருக்கின்றார். பிரம்மா-விஷ்ணு-சங்கருக்கு சூட்சம சரீரம் கிடைத்துள்ளது. அது சூட்சம லோகம் என அழைக்கப் படுகிறது. மேலும் அது சாந்தி தாமம், அமைதி உலகம். இது ஸ்தூல் வதனம். எப்பொழுது யார் வந்தாலும் முதன் முதலில் அவர்களை விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யக் கூற வேண்டும். ஆத்மாவின் அப்பா யார்? உயர்ந்ததிலும் உயர்ந்தவர் என்று பகவானுக்குத்தான் கூறப்படுகிறது. சாது, சந்நியாசிகள் அனைவரும் பிரார்த்தனை செய்கிறார் கள். பிரார்த்தனைக்கு வேண்டுதல் எனக்கூறப்படுகிறது. ஓ, இறைத் தந்தையே! நாங்கள் வேண்டுகிறோம், எங்களது பாவங்களை பஸ்மம் செய்யுங்கள். கருணையுள்ளம் கொண்ட பாபா கருணை காட்டுங்கள். இப்படியெல்லாம் அழைக்கிறார்கள். எல்லோரும் கருணை காட்ட மாட்டார்கள். அனைவர்மீதும் கருணை காட்டக்கூடியவர் ஒரே ஒரு தந்தை மட்டும் தான். சர்வோதயா எனக் கூறுகிறோம் அல்லவா? அவர் இப்பொழுது என்ன செய்கிறார். எத்தனை பேர் மீது கருணை காட்டுவார். அதுவும் நாடகத்தில் பதிவாகியுள்ளது. இந்த நேரத்தில் என்ன வெல்லாம் நடக்கிறதோ, அதோடு நீங்கள் ஒப்பிட்டுக் கொள்கிறீர்கள். பகவத் கீதையில் இந்த விஷயங்கள் இல்லை. கீதை என்பது ஞானம், மற்றபடி சரித்திரம் முதலியவற்றிற்கு எந்த அவசியமுமில்லை. மாணவர்கள் ஆசிரியரின் சரித்திரத்தைப் பாடுவார்களா என்ன? மாஸ்டரை மகிமை பாடுவதால் எந்த பலனும் இல்லை. அவர் ஞானக்கடல், சுகக்கடல் என்று தந்தையை வெறுமனே மகிமை பாடுவதால் ஒன்றும் கிடைக்காது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்திருக்கிறீர்கள் - பாபா இராஜயோகம் கற்றுக் கொடுத்து நம்மை திரிகாலதரிசி ஆக்குகிறார். அதாவது, மூன்று காலங்கள் மற்றும் மூன்று உலகங்களின் ஞானம் கொடுக்கின்றார். ஆகவே உங்களை மாஸ்டர் திரிலோகிநாத் என்றும் கூறமுடியும். திரிகாலதரிசி என்றும் கூறமுடியும். உண்மை யிலேயே நாம் மூன்று உலகங்களையும் புரிந்து கொண்ட தலைவன் ஆகுகிறோம். இது இராஜயோகம். நாம் மஹாராஜா ஆகிக்கொண்டு இருக்கின்றோம். ஆக்கக்கூடியவர் தந்தை. பாரஸ்நாத் எனக் கூறுகிறார்கள் அல்லவா அவர்கள் லஷ்மி, நாராயணன். அவர்களுக்கு கோவில் உள்ளன. ஆனால் இவர்கள் யார் என்று மனிதர்கள் தெரிந்திருக்கவில்லை. லஷ்மி நாராயணன் பாரஸ்புரியின் தலைவர்கள். சத்யுகத்திற்கு பாரஸ்புரி எனக் கூறப்படுகிறது.

உண்மையில் கிருஷ்ணன் வைர, வைடூரிய மாளிகையில் இருந்தார். பாரஸ்நாத்தாக இருந்தார் என்பதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆகவே முதன் முதலில் இதைப் புரிய வையுங்கள் அனைவரின் படைப்பாளர் ஒரு தந்தை என நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள். பிரம்மா-விஷ்ணு-சங்கரருக்கும் அவர் படைப்பாளராக இருக்கின்றார். முதலில் இதை உறுதிப்படுத்துங்கள். அந்த தந்தை சொர்க்கத்தின் படைப்பாளர். சொர்க்கத்தில் ஆதி சநாதன தேவி-தேவதா தர்மம் இருந்தது. அவர்களுக்கு இந்த ஞானம் எப்பொழுது கிடைத்தது? தந்தை கூறுகிறார். நான் கல்ப கல்பமாக ஞானம் கொடுக்க சங்கம யுகத்தில் வருகின்றேன். உண்மையில் நீங்கள் சத்யுகத்தின் ஆதி பாரஸ்நாத்தாக ஆகிக்கொண்டு இருக்கிறீர்கள். எத்தனை முதல் தரமான ஞானம் இது; இங்கு அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். நாம் பாபாவிடமிருந்து சொர்க்கத் தின் ஆஸ்தியை அடைந்து பாரஸ்நாத் பாரஸ்புரியின் எஜமான் ஆவோம் என்று புத்தி புரிந்து கொள்கிறது- லஷ்மி, நாராயணன் ஆதி தேவி-தேவதைகள் எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தார்கள். நிறைய நகைகள்

முதலியன இருந்தன. பெரிய செல்வந்தராக இருந்திருக் கிறார்கள். ஆகவே முதன்முதலில் தந்தையைப் புரிந்து அவரிடமிருந்து ஆஸ்தி அடைய வேண்டும். நினைவினால் ஆஸ்தி அடைய வேண்டும். இது சூட்சம விஷயம். வைர, வைடூரியங்களின் எத்தனை பெரிய, பெரிய மாளிகைகள் இருந்தன. இப்பொழுது அவை காலியாகி விட்டன. பிறகு அதற்குரிய நேரத்தில் வெளிப்பட்டுவிடும். முதலில் இருந்தது, பிறகு மறைந்து மீண்டும் அவசியம் உண்டாகும், நாடகத்தில் இது பதிந்துள்ளது. இது புத்தியினால் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். யுத்தத்தில் கூட அனைத்தும் தூள்தூளாகி விடுகிறது. பிறகு புதிதாக மாளிகைகளை உருவாக்குகிறார்கள். மாளிகைகள் அவசியம் உருவாக்கப்படும். உங்களுக்கு சாட்சாத்காரம் கிடைக்கின்றது - உண்மையில் மாளிகைகள் இருக்கின்றன. நாம் உருவாக்கியிருந்தோம். கடலுக்குள்ளே போய் விட்டது, அது மீண்டும் வரும் என அவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால் அப்படியெல்லாம் இல்லை. இப்பொழுது நீங்கள் துவாரகைக்கு எஜமான் ஆகிக்கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு உயர்ந்த செல்வந்தராக இருந்தீர்கள். செல்வச் செழிப்பு எல்லாம் இருந்தது. இப்பொழுது எல்லாம் போய்விட்டது. எல்லோரும் எடுத்துக் கொண்டார்கள். மீண்டும் அப்படித்தான் ஏற்படும். முதன்முதலில் தந்தையின் அறிமுகம் கொடுத்து பின் சக்கரத்தின் இரகசியத்தை, எப்படிச் சுற்றுகிறது என புரிய வைக்க வேண்டும். சத்யுகத்தின் ஸ்தாபனையை தந்தைத் தான் செய்வார். இப்பொழுது பாபா எதிரில் அமர்ந்து கூறுகிறார்- என்னை நினைவு செய்யுங்கள் என்று இந்த நினைவு யோக அக்னி மூலமாகத்தான் நீங்கள் தூய்மையின்மையிலிருந்து தூய்மையாகுகிறீர்கள். வேறு உபாயம் எதுவும் இல்லை. யோக அக்னியால் ஆத்மா தூய்மையின்மையிலிருந்து தூய்மை ஆகிறது. பதீத பாவன தந்தை தான் வந்து தூய்மையான உலகத்தை ஸ்தாபனை செய்கிறார். பிறகு கங்கையை ஏன் பதீத பாவனி என நீங்கள் கூறுகிறீர்கள். ஜபம், தவம், கங்கா ஸ்நானம் முதலிய இவையெல்லாம் பக்திமார்க்க சம்பிரதாயங்கள். பக்தி மார்க்கம் முதலில் அவ்விபச்சாரியாக (ஒருவரை நினைவு செய்வது) இருந்தது. பிறகு விபச்சாரியாகி (பல கடவுளை நினைவு செய்வது) விட்டது. இல்வாறாவதில் அரைக்கல்பம் ஆகிறது. 16 கலையிலிருந்து 14 கலைகள், பிறகு கலைகள் குறைந்து கொண்டே போகிறது. ஞானக்கடல், தந்தை இதைப் புரிய வைக் கிறார். பிரம்மா-விஷ்ணு-சங்கர் பக்கம் செல்வதில்லை. ஆத்மாக்கள் பரமபிதா பரமாத்மா தந்தையைத் தான் நினைவு செய்து கொண்டு இருக்கிறார்கள். அதுவும் அவர்களுக்கு துக்கம் ஏற்படும்பொழுது, சத்யுகத்தில் சுகம் இருப்பதால் யாரும் அழைப்பதில்லை. இப்பொழுது மீண்டும் சொர்க்கத் திற்குச் செல்வோம். அங்கு எந்த துக்கமும் கிடையாது. ஆகவே, சத்யுகத்தில் தந்தையை நினைவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. நாடகப் படி பாபா நமக்கு சுகத்தின் ஆஸ்தி கொடுத்து விட்டுத்தான் செல்வார். வயதாகும்போது மனிதர்கள் வானப்பிரஸ்தம் (வீடு வாசலைத் துறந்து) சென்று அமர்ந்து விடுகிறார்கள். குருவை நாடுகிறார்கள். இங்கேயோ, சுயம் தந்தையே வந்து சத்குரு ஆகிறார். உங்கள் அனைவரையும் உடன் அழைத்துச் செல்வேன் எனக்கூறுகிறார். இப்படி வேறு யாரும் கூறமுடியாது. மற்ற யாரும் கூட அழைத்துச் செல்ல மாட்டார்கள். ஒவ்வொருவரும் புனர்ஜென்மம் எடுத்துத்தான் ஆக வேண்டும். நடிப்பில் வந்து தான் தீர வேண்டும். நானோ திரும்பத் திரும்ப ஜென்மம் எடுப்பதில்லை. ஒருவேளை நானும் திரும்பத் திரும்ப ஜென்மம் எடுத்தால் தமோப்பிரதானம் ஆகிவிடுவேன். ஆத்மா தான் அழுக்காகுகிறது.

ஆத்மாவில் துருபடிகிறது. தங்கயுகம், வெள்ளியுகம் என்ற வார்த்தை இப்பொழுது உள்ளது. உண்மையில் இப்போது இரும்பு யுகமாக இருக்கிறது. இப்பொழுது சங்கமம். தந்தை அவசியம் வரத்தான் வேண்டும். பழைய சிருஷ்டியை புதியதாக ஆக்குவது - இது தந்தையினுடைய காரியம் மட்டுமே. தந்தைதான் பதீத பாவனன் அதாவது சிருஷ்டியை மாற்றக்கூடியவர். சிருஷ்டியின் படைப்பாளர் இல்லை, மாற்றக் கூடியவர். படைப்பவர் எனக் கூறுவதால், பெரிய பிரளயம் ஏற்படும் என மனிதர்கள் நினைக்கிறார்கள். பதீத பாவனன் என்ற வார்த்தை சரியானது. சாதுக்களும் கூட பதீத பாவன சீதாராம் எனப் பாடுகிறார்கள். பதீத பாவனி கங்கா என ஒருபோதும் பாடுவ தில்லை. பதீத பாவனன் எனக் கூறுவதால் புத்தி பரமாத்மாவின் பக்கம் செல்கிறது. கங்கையோ பதீத பாவனி இல்லை. இதுவோ தண்ணீர். இது அங்கேயும் உண்டு. ஆனால் அங்கு எல்லாப் பொருட்களும் சதோபிரதானமாக இருக்கிறது. கங்கையும் சதோபிரதானமாகவே இருக்கும். இங்கேயோ தமோபிரதானமாக உள்ளது. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கிராமங்களையெல்லாம் மூழ்கடித்துவிடுகிறது. பிரம்மபுத்திரா எத்தனை கிராமங்களை மூழ்கச் செய்கிறது. இது இருப்பதே துக்க தாமமாகத்தான். சத்யுகத்தில் சிறிதும் துக்கம் அனுபவம் ஆகாது. அங்கே நதிகள் முறைப்படி தன் பாதையில் செல்லும். இங்கே தன் பாதையைத் தாண்டி விடுகிறது. எந்த நேரமும் எந்தப் பக்கமும் சென்று விடுகிறது. அங்கு 5 தத்துவங்களும் சதோபிரதானமாக இருப்பதால் நீர் கூட ஒருபோதும் துக்கம் தருவதில்லை. இங்கே நீர் கூட துக்கம் தருகிறது. முத-ல் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். சொர்க்கத்தின் சுகத்தைக் கொடுப்பவர் யார்? அவசியம் தந்தை யாகத்தான் இருப்பார். இப்பொழுதோ நரகம். பாபா வந்திருக்கின்றார். நாம் பிரஜா பிதா பிரம்மாவின் குழந்தைகள். பிரம்மா குமார-குமாரிகள். பிரஜாபிதா பிரம்மா இருந்தால் தான் புதிய சிருஷ்டியைப் படைக்கலாம். மனிதனை தெய்வமாக்கினார்... யார் ஆக்கினார்? பரமபிதா பரமாத்மா. கிருஷ்ணர் தேவதை. தந்தைதான் வந்து மனிதனை தேவதையாக ஆக்குகிறார். இதை நீங்கள் இப்பொழுது புரிந்திருக்கிறீர்கள். இதற்கு முன்னால் வெறுமனே பாட மட்டும் செய்தீர்கள் மனிதனி-ருந்து தேவதையாக்கினார். ஆனால் தெரிந்திருக்கவில்லை,. சத்யுகத்தை யார் ஸ்தாபனை செய்தார்? படைப்பாளர் யார்? சத்யுக சிருஷ்டி கலியுகம் ஆகிவிடுகிறது. ஆக, குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொண்டீர்கள் - இது ஆகாய தத்துவத்தின் பெரிய மேடை இதில் விளை யாட்டு நடக்கிறது. திறந்த மேடை தேவையல்லவா? மனிதர்கள் நடிக்கிறார்கள் என்றால் வெளிச்சமும் தேவை. இதற்காக சூரியன், சந்திரன் சேவை செய்கின்றன. நட்சத்திரங்களும் ஜொலிக்கின்றன. இரவாகும்போது வெளிச்சம் அதாவது சுகம் தருகிறது. ஆகவே சூரிய தேவதை, சந்திர தேவதை எனக் கூறுகிறார்கள். வெளிச்சம் முதலியவை சுகம் தருகின்றன அல்லவா நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல்போய் தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் வணக்கங்கள்.

தாரணைக்குரிய முக்கிய சாரம்:

(1) நாடகத்தின் சக்கரத்தை சரியான முறையில் புரிந்து முயற்சி செய்ய வேண்டும். தந்தைக்கு சமமாக கருணையுள்ளம் உடையவராக ஆகி அனைவர்

மீதும் கருணை காட்ட வேண்டும்.

(2) தந்தை உண்மையான கண்டத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். ஆகவே உண்மையாக இருக்க வேண்டும். தந்தையின் நினைவினால் ஆத்மாவைத் தூய்மை யாக்க வேண்டும்.

வரதானம் : சேவைக்கான பாவனையின் மூலம் அழிவற்ற பிராப்தி அடையக் கூடிய சதா மாயையின் நோயிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

எந்தக் குழந்தைகள் சங்கமயுகத்தில் பிரபுவின் பழம், அழிவற்ற பழம், சர்வ சம்பந்தங்களின் அன்பு ரசனைக்கான பழம் அடைகிறார்களோ அவர்கள் சதா மாயாவின் நோயிலிருந்து விடுபட்டு இருப்பார்கள். மற்ற பழங்கள் சத்யுகத்திலும் கிடைக்கும், க-யுகத்திலும் கிடைக்கும். ஆனால் சேவையில் பாவனைக்கான உடனடிப் பலன் (பிரத்ட்சபல்), பிரபுவின் பழம் இப்பொழுது சாப்பிடவில்லையெனில் முழு கல்பத்திலும் சாப்பிட முடியாது. இந்த பழம் ஈஸ்வரிய மந்திரம் நிறைந்த பழமாகும். இந்த பழம் சாப்பிடுவதனால் இரும்பிலிருந்து தங்கமாக மட்டுமின்றி வைரமாக ஆகிவிடுவீர்கள். இந்த பழம் அனைத்து தடைகளையும் அழிக்கக் கூடிய பழமாகும்.

சுலோகன்: அபகாரிகளுக்கும் உபகாரம் செய்பவர்கள், எதிரியையும் நண்பனாக புரிந்து கொள்பவர்கள் தான் பாப்சமான் ஆவார்கள்.